
தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்





| Vol: 02 | Issue: 130 | 4 Pages | 8.12.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 130 | 4 பக்கங்கள் | 8.12.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப**
**கோடியு மல்ல பல**

**விளக்கம்:** அறிவில்லாதவர்ஒருவேளையாவது வாழ்க்கையின் தன்மையை ஆராய்ந்து அறிவதில்லை.ஆனால்வீணில்எண்ணுவனவோ ஒரு கோடியும் அல்ல, மிகப்பல எண்ணங்கள்.

# சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகள் அழிந்து விட போகிறதா?.. எலான் மஸ்க்




டெக்ஸ்சாஸ், டிச.8

உலகின் பிரபலமான தொழிலதிபரும்,எக்ஸ் தள உரிமையாளருமான எலான் மஸ்க், தன்னுடைய க ரு த் து க ளை வெளிப்படையாக சொல்ல கூடியவர். அவர் இரு நாட்களுக்குமுன்புசிங்கப்பூர் உள்ளிட்டநாடுகள்விரைவில் அழிந்து விடும் என்று ஜோதிடம் சொல்லி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தார்.

இது குறித்து எலான் மஸ்க் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது;

சிங்கப்பூரில் குழந்தை பிறப்பு விகிதம் வெகுவாகக் குறைந்திருப்பதாக வெளியானத் தகவலை மேற்கோள்காட்டிய எலான் மஸ்க் மரியோ நாவ்பால்என்பவர்,சிங்கப்பூரின்குழந்தைபிறப்புவிகிதம்குறைந்திருப்பது தொடர்பானதகவலை வெளியிட்டிருந்த எக்ஸ்தளபதிவுக்கு பதிலளிக்கும் விதமாக எலான் மஸ்க் சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகள் விரைவில் அழியப்போகின்றன என பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில் எலான் மஸ்க் கூறியிருக்கும் இந்த தகவல், பலரையும் அதிர்ச்சி அடைய செய்துள்ளது. இது தொடர்பாக மரியோ நாவ்பால் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்;

கடந்த பல பத்தாண்டுகளில் சிங்கப்பூரின் குழந்தை பிறப்பு விகிதமானது பெரிய அளவில் சரிந்துவந்துள்ளது. கடந்த 2023ஆம் ஆண்டு சிங்கப்பூரின் குழந்தை பிறப்பு விகிதமானது வரலாற்றில் எங்கும் இல்லாத அளவுக்கு 0.97 ஆக குறைந்துள்ளது. இது 1.0க்கும் குறைவாக குழந்தை பிறப்பு விகிதம் குறைந்திருப்பது முதல் முறையாகும். அதாவது, ஒரு பெண் ஒன்றுக்கும் குறைவான குழந்தைகளையே பெற்றுக்கொள்கிறார்கள் என்றால், பலரும் ஒரு குழந்தை கூட பெறுவதில்லை என்பதாகிறது.

இதனால் சிங்கப்பூரில் வயதானவர்கள் மிக அதிகம் இருப்பர், தொழிலாளர்கள்வீதம்குறைவாக இருக்கும், மனிதவளம்குறைந்துவிடும். தொழிற்சாலை முதல் உணவு வினியோகம் அனைத்தும் பெரிதும் பாதிக்கப்படும் என்று மரியோ நாவ்பால் பதிவிட்டிருந்தார். ஒரு பெண் தனது முதல் குழந்தையை பெறும் வயதான 25 34 வரை பெரும்பாலும் திருமணமாகாமல் இருப்பதால், 20 வயதில் குழந்தை பெறும் பெண்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தென் ஆப்பிரிக்கா: சட்டவிரோத தங்க சுரங்கத்திற்குள் சிக்கிய 6 பேர் பலி



ஜோகனர்ஸ்பெர்க், டிச.8

தென் ஆப்பிரிக்காவின் ஸ்டில்போன்டைன் என்ற இடத்தில் மூடப்பட்ட சட்டவிரோத தங்க சுரங்கம் ஒன்று உள்ளது. இந்த சட்டவிரோத தங்க சுரங்கத்திற்குள் தங்கம் எடுப்பதற்காக ஏராளமான சுரங்க தொழிலாளர்கள் அங்கு சென்றுள்ளனர். சுரங்கத்திற்குள் சென்ற அவர்கள் எதிர்பாராத விதமாக உள்ளே சிக்கிக்கொண்டனர். இதையடுத்து அவர்களை மீட்கும் பணியில் போலீசார் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் சுரங்கத்திற்குள் சிக்கியிருப்பவர்களுக்கு தேவையான உணவு மற்றும் தண்ணீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த சூழலில் சுரங்கத்திற்குள் சிக்கிக் கொண்டவர்களில் 6 தொழிலாளர்கள் உயிரிழந்துவிட்டதாக தென் ஆப்பிரிக்கா போலீசார் தெரிவித்துள்ளனர். அவர்களது உடல்களை மீட்டுள்ள போலீசார், மீதமுள்ளவர்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை இன்னும் சரியாகதெரியவில்லை. ஆனால்இந்தஎண்ணிக்கைநூற்றுக்கணக்கானதாக இருக்கலாம் என்று போலீசார் தெரிவித்துள்ளனர்.

# கலிபோர்னியாவை உலுக்கிய நிலநடுக்கம்


வாஷிங்டன், டிச.8

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் நேற்று நள்ளிரவில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 7.0 அலகாக பதிவாகியிருந்தது. பெர்ண்டேல் நகருக்கு மேற்குதென்மேற்கில் 100 கிலோ மீட்டர்தொலைவில், கடலுக்கடியில் 10 கிலோ மீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் உருவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

நிலநடுக்கம் காரணமாக பல்வேறு பகுதிகளில் கட்டிடங்கள் குலுங்கின. கடைகளில் உள்ள பொருட்கள் அலமாரிகளில் இருந்து விழுந்தன. பல குடியிருப்புகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. பொதுமக்கள் பீதியில் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளுக்கு வந்தனர். நிலநடுக்கத்தால் ஒரு சில இடங்களில் கட்டிடங்கள் சேதமடைந்தன. 7.0 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதால்,நிலநடுக்கத்தின்மையப்பகுதியிலிருந்து300கி.மீ.தொலைவில் உள்ள வட கடலோரப் பகுதிகளில் அபாயகரமான சுனாமி ஏற்படலாம் என சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்திருந்தது. இதையடுத்து அதிகாரிகள் விரைவான நடவடிக்கையில் இறங்கினர். மீட்புக் குழுவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டனர். பாதிப்புகள் ஏற்படும்பட்சத்தில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைவுபடுத்துவதற்காக அவசரகால நிலையை கலிபோர்னியா கவர்னர் கவின் நியூசோம் அறிவித்தார்.

பின்னர் 90 நிமிடங்களுக்குப் பிறகு ஒருசில அறிவுறுத்தல்களுடன் சுனாமி எச்சரிக்கை திரும்ப பெறப்பட்டது. அதன்பிறகே மக்களும் அதிகாரிகளும் நிம்மதி அடைந்தனர். சுனாமி எச்சரிக்கையைத் தொடர்ந்து, பெர்க்லியில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் சுனாமி அச்சுறுத்தல் குறைந்த பின்னர் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது. மக்கள் யாரும் வெளியேற்றப்படவில்லை. அதேபோல்,மெண்டோசினோகவுண்டியில்அறிவுறுத்தலுடன்எச்சரிக்கையில் மாற்றம் செய்யப்பட்டது.

# அம்பேத்கர் காட்டிய பாதையில் திராவிட மாடல் அரசு நடைபோடுகிறது: முதல்வர் மு.க.ஸ்டாலின்



சென்னை, டிச.8

சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்சார்பில்தூய்மைப் பணியாளர்களைதொழில்முனைவோர்களாக மாற்றும்திட்டத்தின்கீழ்தூய்மைப் பணியாளர்களுக்கு 213 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வழங்கிடும் முதற்கட்டமாக 100 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்களை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

மேலும், அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 128 பயனாளிகளுக்கு கடனுதவிக்கான ஆணைகளையும், 100 தூய்மைப் பணியாளர்களுக்கு சுகாதார அட்டைகளையும், 30 நரிக்குறவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதியில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளையும் அவர் வழங்கினார். பின்னர் உரையாற்றிய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது: அம்பேத்கர் காட்டிய பாதையில் திராவிட மாடல் அரசு நடைபோடுகிறது. அம்பேத்கருக்கு நிகரான தலைவர் இல்லை என தந்தை பெரியார் கூறினார். அதிகாரிகள், காவலர்கள், தூய்மை பணியாளர்கள் சிறப்பாக செயல்படுவதால் அரசுக்கு நற்பெயர் கிடைத்துள்ளது. தூய்மை பணியாளர்கள் என்பதை விட தூய உள்ளம் கொண்ட பணியாளர்கள் என்பதே சரி. நமது லட்சிய வழியில் ஒரு சில இடர்பாடுகள் இருப்பதை நான் மறுக்கவில்லை. ஏதோ ஒரு சம்பவம் நடந்தால் இதுதான் பெரியார் மண்ணா என கேள்வி எழுப்புகின்றனர். உங்கள் மதவெறி, சாதி வெறி தமிழ்நாட்டு மண்ணில் ஒருபோதும் வெற்றி பெறாது. மதவெறி சாதிவெறி சக்திகளின் எண்ணம் இந்த மண்ணில் நான் இருக்கும் வரை நிறைவேறாது. சமூகத்தை பிளவுபடுத்தும் சக்திகளை அம்பலப்படுத்துவோம். இவ்வாறு அவர் கூறினார்.

# பெஞ்சல் புயலால் பெய்த வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பாலத்தை நேரடியாக ஆய்வு



திருவண்ணாமலை, டிச.8

திருவண்ணாமலைதெற்குமாவட்டம், செங்கம் சட்டமன்ற தொகுதி தண்டராம்பட்டு ஒன்றியத்திற்கு உட்பட்ட தொண்டமானூர் மற்றும் அகரம்பள்ளிப்பட்டு கிராமங்களில் ஃபெஞ்சல் புயலால் பெய்த ★வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பாலத்தை நேரடியாக ஆய்வுசெய்து, கனமழையில் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு முன்னாள் முதலமைச்சர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், கழகப் பொதுச்செயலாளர், புரட்சித்தமிழர், அண்ணன், எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கிய போது.இந்நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைச் செயலாளர்,போளூர் சட்டமன்ற உறுப்பினர், கழக விவசாய பிரிவு செயலாளர், தெற்கு மாவட்ட கழக செயலாளர், அண்ணன் அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி.MLA., அவர்கள், மற்றும் திருவண்ணாமலை கிழக்கு, மத்தியம், வடக்கு மாவட்ட கழக செயலாளர்கள், S.ராமச்சந்திரன் L.ஜெயசுதாலட்சுமி காந்தன், தூசிK.மோகன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# சிறந்த போலீஸ் ஸ்டேஷனாக ஆலத்துார் ஸ்டேஷன் தேர்வு



பாலக்காடு, டிச.8

நாட்டின் 5வது சிறந்த போலீஸ் ஸ்டேஷனாக, பாலக்காடு மாவட்டத்தில் உள்ள, ஆலத்தூர் ஸ்டேஷனை மத்திய உள்துறை அமைச்சகம் தேர்வு செய்துள்ளது.

கேரள மாநிலம், பாலக்காடு, ஆலத்தூர் போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் உன்னிகிருஷ்ணன் கூறியதாவது: மத்திய உள்துறை அமைச்சகத்தின் மதிப்பாய்வு இறுதி கட்டத்தில், 76 போலீஸ் ஸ்டேஷன்களில் இருந்து ஆலத்தூர் ஸ்டேஷன் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு தரப்பில் உள்ள குற்ற விசாரணை, சட்ட அமலாக்கம், அடிப்படை வசதிகள், அணுகுமுறை, லாக்கப் மற்றும் பதிவு அறை உள்ளிட்ட வசதிகள் என, நெறிமுறைகளைஅடிப்படையாககொண்டு மத்திய உள்துறை அமைச்சகம் சிறந்த போலீஸ் ஸ்டேஷனை தேர்ந்தெடுத்து உள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் மீது எடுத்த நடவடிக்கை, வழக்கு விசாரணையின் வளர்ச்சி, புகார் தீர்வு, புகார்தாரர்களிடம் உள்ள அணுகுமுறை, குற்ற செயல்கள் தடுப்பதற்கான நடவடிக்கைகள் ஆகியவையில் உள்ள சிறப்பு மற்றும் பிற பொது நலச் செயல்பாடுகள் போன்றவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

முந்தைய ஆண்டுகளில், மலப்புரம் மாவட்டத்தில் உள்ள குற்றிப்புரம், கண்ணூர் நகரில் உள்ள வளபட்டிணம் ஆகிய போலீஸ் ஸ்டேஷன்கள், நாட்டின் சிறந்த 10 போலீஸ் ஸ்டேஷன்களில் பட்டியலில் இடம் பிடித்திருந்தது.

இந்த பட்டியலில், நடப்பாண்டு ஆலத்துார் போலீஸ் ஸ்டேஷன் இடம் பிடித்துள்ளது குறிப்பிடத்த க்கது.

# திருவண்ணாமலை தீபத் திருவிழா கட்டுப்பாடுகள் விதிப்பது குறித்து முடிவு: அமைச்சர் சேகர்பாபு



சென்னை, டிச.8

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் கார்த்திகை தீபத் திருவிழா தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் முக்கிய உற்சவங்களில் ஒன்றான மகா தேரோட்டம் 10ந்தேதி நடைபெற உள்ளது. 13ந்தேதி அதிகாலை கோவிலில் பரணி தீபமும், மாலையில் 2,668 அடி உயர மலை உச்சியில் மகா தீபமும் ஏற்றப்பட உள்ளது. மகா தீப தரிசனத்தை 11 நாட்களுக்கு பக்தர்கள்காணலாம். கார்த்திகைதீபத் திருவிழா சண்டிகேஸ்வரர் உற்சவத்துடன் 17ம் தேதி நிறைவு பெறுகிறது.

இந்த நிலையில் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் கார்த்திகை தீபத் திருவிழா குறித்த கட்டுப்பாடுகள் இன்று மாலை அறிவிக்கப்படும் என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார். சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது:

அறநிலையத் துறை செயலாளர் மற்றும் முக்கிய அதிகாரிகளுடன் ஆலோசனை நடைபெற உள்ளது. இந்த ஆலோசனை கூட்டத்தில் திருவண்ணாமலை தீபத் திருவிழாவுக்கு கட்டுப்பாடுகள் விதிப்பது குறித்து முடிவெடுக்க ப்படும். மேலும் மலை உச்சிக்கு செல்ல எவ்வளவு பேரை அனுமதிப்பது என்பது குறித்தும் முடிவெடுக்கப்படும். 3 இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டதையடுத்து தீபத் திருவிழாவுக்கு கட்டுப்பாடுகள் விதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆய்வின் இறுதியை முதல்அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்று கார்த்திகை தீபத் திருவிழா கட்டுப்பாடுகள் இன்றே அறிவிக்கப்படும். இதுவரை இல்லாத அளவு தி.மு.க. ஆட்சியில் அதிகமான கோவில் சொத்துகள் மீட்கப்பட்டன. ரூ.6,955 கோடி மதிப்பு கோவில் சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. சிதம்பரம் நடராஜர் கோவிலில் அனைத்தும் சரியாக நடந்தால் அரசு தலையிடாது. இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னை: தனியார் திருமண மண்டபத்தில் லிப்ட்டில் சிக்கிய 11 பேர் பத்திரமாக மீட்பு



சென்னை, டிச.8

சென்னை மாதவரம் அருள்நகர் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில்திருமணநிச்சயதார்த்த நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வந்த 7 பெண்கள், 4 ஆண்கள் ஆகிய 11 பேர் மண்டபத்தின் மேல்தளத்திற்கு செல்வதற்காக அங்கிருந்த லிப்ட்டை பயன்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் ஒரே நேரத்தில் 11 பேர் ஏறியதால் பாரம் தாங்காமல் லிப்ட் பாதி வழியில் நின்றது. சுமார் 15 நிமிடங்கள் அவர்கள் லிப்ட்டில் சிக்கித் தவித்த நிலையில், இதுகுறித்து தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த மாதவரம் தீயணைப்புத் துறையினர் அவர்களை பத்திரமாக மீட்டனர்.

அப்போது லிப்ட்டில் சிக்கிய 2 பெண்கள் மயக்கமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தினகனி



# திருமாவளவனின் இரட்டை வேடம்: பாஜக மூத்த தலைவர் தமிழிசை தாக்கு

சென்னை, டிச.8

விகடன் பிரசுரமும், வாய்ஸ் ஆப் காமன்ஸ் நிறுவனமும் இணைந்து 'எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்' என்ற தலைப்பிலான 992 பக்கங்கள் கொண்ட புத்தகத்தை தொகுத்துள்ளது. இந்த புத்தகத்தின் வெளியீட்டு விழா சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதில் தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய், விசிக துணைப் பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இந்த விழாவில் பேசிய ஆதவ் அர்ஜுனா, திமுகவை



சாடும் வகையில் பேசினார்.

இந்த நிலையில், ஆதவ் அர்ஜுனா பேச்சை சுட்டிக்காட்டி திருமாவளவனை விமர்சித்துள்ள பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் பதிவிட்டுள்ளதாவது: அனைவருக்குமானவர் அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழாவில் திருமாவளவனிவின் மனசாட்சி அங்கே இருக்கிறது என்று அவர் கட்சியில் இருக்கும் துணைப் பொதுச் செயலாளரே கூறுகிறார்! இன்றைய அரசியல் நாடகத்தில் திருமாவளவனின் இரட்டை வேடம். ஒரு வேடத்தின் மனசாட்சி அங்கே! மேடையில் ஒரு வேடம்! இங்கே மன்னர் ஆட்சி நடத்தும் திமுகவின் அரசாட்சியோடு... ஒரு வேடம்! திமுக கூட்டணிக்கு எதிராக ஒரு வேடம்! திமுக கூட்டணிக்கு ஆதரவாக... நேராக செல்லாதது நேர்மையான முடிவா? அல்லது நேரத்திற்கு ஏற்ற முடிவு செய்து கொள்ளலாம்.. என்ற முன்னெச்சரிக்கை? முடிவா.. அல்லது எச்சரிக்கை செய்யும் முன்னோட்டமா????" இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# விஜய் தன்னம்பிக்கையோடு கட்சி ஆரம்பித்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது: வி.சி.க. எம்.பி. விமர்சனம்

சென்னை, டிச.8

விகடன் பிரசுரம் மற்றும் வாய்ஸ் ஆப் காமன்ஸ் நிறுவனம் சார்பில் 'எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்' என்ற புத்தக வெளியீட்டு விழா சென்னை நந்தம்பாக்கத்தில் நேற்று நடைபெற்றது. இதில் தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய், வி.சி.க. துணைப் பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் பங்கேற்பதாக கூறப்பட்டது. பின்னர் விழாவில் பங்கேற்கமாட்டேன் என திருமாவளவன் தெரிவித்தார். தி.மு.க. கூட்டணியில் இருப்பதால் விஜய் கலந்து கொள்ளும் விழாவில் கலந்து கொள்ள நெருக்கடி ஏற்



பட்டுள்ளதால் திருமாவளவன் பங்கேற்க மறுப்பு தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியானது. இந்த விழாவில் பங்கேற்காததற்கான காரணத்தை திருமாவளவன் நீண்ட அறிக்கையின் மூலம் விளக்கியிருந்தார்.

இந்த நிலையில் புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், கூட்டணி கட்சிகளின் அழுத்தத்தினால் திருமாவளவன் பங்கேற்வில்லை எனக் கூறினார். இதற்கு மறுப்பு தெரிவித்த திருமாளவன், "எனக்கு எந்த அழுத்தமும் இல்லை என்பதை நான் தெளிவுபடுத்தி இருக்கிறேன். அழுத்தம் கொடுத்து அதற்கு இணங்கக்கூடிய அளவுக்கு நானும், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் பலவீனமாக இல்லை" என்று கூறினார்.

இந்த நிலையில் திருமாவளவன் பற்றி விஜய் கூறியதை விடுதலை சிறுத்தைகள் கட்சி எம்.பி. ரவிக்குமார் விமர்சித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், "வி.சி.க. தலைவர் திருமாவளவன் விரிவாக அறிக்கை கொடுத்ததற்கு பிறகும் விஜய் எங்கள் தலைவரைப் பற்றிப் பேசியதைப் பார்த்தால், அவர் கட்சி ஆரம்பித்திருப்பதே வி.சி.க.வோடு எப்படியாவது கூட்டணி சேர்ந்துவிட வேண்டும் என்பதற்காகத்தானோ எனஎண்ணத் தோன்றுகிறது. தன்னம்பிக்கையோடு கட்சி ஆரம்பித்திருந்தால் இப்படி வலிந்துவலிந்துஅழைப்பு விடுக்கும் நிலை ஏற்பட்டிருக்காது" என்று தெரிவித்துள்ளார்.

# பல்லடம் அருகே நடந்த 3 பேர் படுகொலைக்கு சி.பி.ஐ. விசாரணை வேண்டும்: அண்ணாமலை

திருப்பூர், டிச.8

திருப்பூர் மாவட்டம், பல்லடம் அருகே சேமலைக்கவுண்டம்பாளையத்தில் தெய்வசிகாமணி (78 வயது), அவரது மனைவி அமலாத்தாள் (75 வயது), மகன் செந்தில் குமார் (46 வயது) ஆகியோர் கடந்த மாதம் 29 ந்தேதி கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டனர். ஒரு வாரம் முடிந்தும் இதுவரை குற்றவாளிகள் பிடிபடவில்லை. இந்த நிலையில் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை நேற்று கொலையான செந்தில்குமாரின் மனைவி கவிதா மற்றும் அவர்களது குடும்ப உறவினர்களுக்கு நேரில் ஆறுதல் கூறினார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அண்ணாமலை கூறியதாவது:

இந்த அளவுக்கு மிகக் கொடூரமான கொலை நடைபெற்று இருப்பதற்கு போதை கலாசாரத்தை தவிர வேறு என்ன காரணம் இருக்க முடியும்?



தமிழகத்தில் சட்டம்ஒழுங்கு முழுமையாக கெட்டுப்போய் உள்ளது. இதனை கண்டு கொள்ளாமல் இருப்பது தமிழக அரசின் மெத்தனப் போக்கையே காட்டுகிறது. தமிழகத்தில் சி.பி.ஐ. விசாரணைக்கு அரசு தடை விதித்துள்ளது. நாம் கோர்ட்டுக்குச் சென்று சி.பி.ஐ. விசாரணை பெற்றுவர ஒருவார காலமாகும். எனவே அதற்குள்ளாகவே தமிழக முதல்அமைச்சர் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# மகாவிஷ்ணு விவகாரம் எதிரொலி; பள்ளிகளுக்கு விருந்தினர்களை அழைக்க கட்டுப்பாடுகள் விதிப்பு

சென்னை, டிச.8

கடந்த ஆகஸ்ட் மாதம், சென்னை சைதாப்பேட்டை அரசு பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற பரம்பொருள் அறக்கட்டளையின் நிறுவனரான மகாவிஷ்ணு, மாற்றுத் திறனாளிகளை அவமதிக்கும் வகையில் பேசியதாக சர்ச்சை எழுந்தது. இது தொடர்பான புகாரின் அடிப்படையில் மகாவிஷ்ணுவை போலீசார் கைது செய்த நிலையில், பின்னர் அவர்ஜாமீனில் விடுதலையானார்.

இந்த சம்பவத்தின் எதிரொலியாக, பள்ளிகளுக்கு விருந்தினர்களை அழைக்க கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக அரசு மற்




றும் தனியார் பள்ளிகளில், விருந்தினர்களை அழைக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து, 28 பக்கங்கள் கொண்ட வழிகாட்டி நெறிமுறைகளை பள்ளிக்கல்வித்துறை செயலாளர் மதுமதி வெளியிட்டுள்ளார்.

அதன்படி மாவட்ட கலெக்டர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குனர் அலுவலகத்தில் இருக்கும், சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், பள்ளி வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவர்கள் என்ற பட்டியலில் இருப்பவர்களை மட்டும் பள்ளிகளுக்கு விருந்தினர்களாக அழைக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பட்டியலில் இடம் பெறாதவர்கள் தங்களைப் பற்றிய முழு விவரங்களை மாவட்ட முதன்மை கல்வி அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அதனை முழுமையாக ஆய்வு செய்து மாவட்ட கலெக்டர் தலைமையிலான குழுவிற்கு பரிந்துரை செய்தால் மட்டுமே அவர்களை விருந்தினர்களாக அனுமதிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்பின்பும் பள்ளி நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்கள், மாணவர்களுக்கு எதிரான கருத்துகளை தெரிவிக்கும் பட்சத்தில், உடனடியாக நிகழ்ச்சியை தலைமை ஆசிரியர்கள் நிறுத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆதவ் அர்ஜூனா மீது நடவடிக்கையா..? வி.சி.க. தலைவர் திருமாவளவன் பதில்

திருச்சி, டிச.8

அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றது. இதில் பேசிய தமிழக வெற்றிக் கழகதலைவர்விஜய், விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவனால் இன்று இந்நிகழ்ச்சிக்கு வர முடியவில்லை. அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழாவில் கூட கலந்துகொள்ள முடியாத அளவிற்கு... கூட்டணி கட்சிகளால் அவருக்கு (திருமாவளவன்) எவ்வளவு அழுத்தம் இருக்கும் என்று என்னால் யூகிக்க முடிந்தாலும், அவருடைய மனது முழுக்க முழுக்க நம்முடன்தான் இருக்கும்' என்று கூறியிருந்தார்.

இந்நிலையில்,த.வெ.க. தலைவர்விஜய் தெரிவித்த கருத்துக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர்தொல்.திருமாவளவன் கருத்து தெரிவித்திருந்தார்.

தொடர்பாக நேற்று திருச்சியில் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய திருமாவளவன், "தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய், அம்பேத்கர் நினைவு நாளில் அம்பேத்கர் தொடர்பான நூலை வெளியிட்டு இருப்பதும், அம்பேத்கரைப் பற்றி பேசி இருப்பதும் பெருமை அளிக்கிறது. பொது நீரோட்டத்தில் அம்பேத்கர் வெகுவாக



பேசப்படுகிறார். அந்த வரிசையில் 'எல்லோருக்குமான தலைவர்' என்ற நூலை வெளியிட்டிருப்பது வரவேற்பு மற்றும் பாராட்டுக்கு உரியது.

தி.மு.க. தலைமையிலான கூட்டணி கட்சிகள் அழுத்தம் என்ற கருத்தை அவர் பதிவு செய்திருக்கிறார். அதில் எனக்கு உடன்பாடு இல்லை. அப்படி எந்த அழுத்தமும் இல்லை என்பதை நான் தெளிவுபடுத்தி இருக்கிறேன். அழுத்தம் கொடுத்து அதற்கு இணங்க கூடிய அளவுக்கு நானும், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் பலவீனமாக இல்லை என்பதை பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்த நிகழ்வில் நான் பங்கேற்காமல் போனதற்கு, விஜய் காரணம் இல்லை. அவருக்கும் எங்களுக்கும் எந்தவிதமான சிக்கலும் இல்லை. ஆனால் எங்கள் இருவரையும் வைத்து விஜய் திருமா ஆகியோர் மேடையில் ஏறப்போகிறார்கள் என்று அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்படாத நிகழ்வை அரசியல் சாயம் பூசி உள்ளனர். அவர்கள் எந்தப் பின்னணியில் இயங்குகிறார்கள் என்று கருத்துக்களை முன்வைத்தது முக்கியமான ஒன்று.

ஏறத்தாழ கால் நூற்றாண்டு காலம் தேர்தல் களத்தில் நாங்கள் நிற்கிறோம். ஓரளவு எங்களாலும் யூகிக்க முடியும். யார் எந்த பின்னணியில் இயங்குகிறார்கள், பேசுகிறார்கள் என்பதை கணிக்க முடியும். அந்த வகையில் தான் அம்பேத்கர் நூல் வெளியீட்டு விழாவை அரசியலாக்கி விடுவார்கள். அப்படிஅரசியல்படுத்துவதை நான் விரும்பவில்லை. இந்த அடிப்படையில் தான் தனியார் புத்தக வெளியீட்டாளர் நிறுவனத்திடம் தெரிவித்துள்ளேன்.

விஜய் மீது எந்த வருத்தமும் இல்லை. தமிழகத்தில் எங்களை வைத்து காய் நகர்த்துகின்ற அரசியல் நடந்து கொண்டிருக்கிறது. அவருக்கு வாழ்த்துக்கள். நான் சுதந்திரமாக, விடுதலை சிறுத்தைகள் கூட்டணிக்கு எந்த பாதகமும் ஏற்படாத வகையில் எடுத்த முடிவு. இதில் எந்த அழுத்தமும் இல்லை. விஜய் சொல்லி இருக்கக் கூடிய கருத்துக்கு அவர் மட்டுமே பொறுப்பு. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஒவ்வொரு சுதந்திரம் இருக்கிறது. அம்பேத்கர் பற்றி இன்று எல்லோரும் பேசுவது மகிழ்ச்சியளிக்கிறது.

ஆதவ் அர்ஜுனா கருத்துக்கு அவரே பொறுப்பு. கட்சி பொறுப்பல்ல. அது அவருடைய தனிப்பட்ட கருத்து. தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் வி.சிக. அங்கம் வகிக்கிறது.

இந்தநிலையில்தி.மு.க. கூட்டணியில் குழுப்பம் ஏற்படுத்தும் வகையில் ஆதவ் அர்ஜுனா கருத்து கூறியிருப்பது உண்மை. இது குறித்து அவரிடம் விளக்கம் கேட்போம். உரிய விளக்கம் கிடைக்கும் என்று பார்ப்போம். அதன்பிறகு இயக்க முன்னணி தோழர்களோடு கலந்து பேசி முடிவெடுப்போம்" என்று அவர் கூறினார்.

# அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழாவிற்கு கூட வரமுடியாத அளவிற்கு... தொல்.திருமாவளவன் குறித்து தவெக தலைவர் விஜய் அதிரடி பேச்சு

சென்னை, டிச.8

சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள அரங்கில் 'எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்' என்ற புத்தக வெளியீட்டு விழா இன்று நடைபெற்று வருகிறது.

இந்த புத்தக வெளியீட்டு விழாவில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் , முன்னாள் நீதியரசர் சந்துரு, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணைப்பொதுச்செயலாளர் ஆதவன் உள்பட பலர் பங்கேற்றுள்ளனர்.

விக்கிரவாண்டியில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாட்டிற்கு பிறகு தவெக தலைவர் விஜய் பங்கேற்கும் பொதுநிகழ்ச்சி இது வாகும்.

நிகழ்ச்சியில் தமிழக



வெற்றிக் கழக தலைவர் விஜய் பேசியதாவது,

மணிப்பூரில் என்ன நடக்கிறது என்றும் நாம் அனைவருக்கும் தெரியும். அதை கண்டுக்கொள்ளாமல் மேல் இருந்து ஒரு அரசு நம்மை ஆட்சி செய்து கொண்டிருக்கிறது.

வேங்கைவயல் ஊரில் என்ன நடந்தது என்று நாம் அனைவருக்கும் தெரியும். சமூகநீதி பேசும் இங்குள்ள அரசு அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுத்ததுபோன்று எனக்கு தெரியவில்லை. இதையெல்லாம் அம்பேதகர் பார்த்தால் வெட்கப்பட்டு தலைகுணிந்துபோவார்.

சம்பிரதாயத்திற்காக டுவிட் போடுவதும், அறிக்கை விடுவதும், மழை தண்ணீரில் நின்று போட்டோ எடுப்பதிலும் எனக்கு உடன்பாடு இல்லை.

விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவனால் இன்று இந்நிகழ்ச்சிக்கு வர முடியவில்லை. அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழாவில்கூட கலந்து கொள்ள முடியாத அளவிற்கு கூட்டணி கட்சிகளால் அவருக்கு (திருமாவளவன்) எவ்வளவு அழுத்தம் இருக்கும் என்று என்னால் யூகிக்க முடிந்தாலும், அவருடைய மனது முழுக்க முழுக்க நம்முடன்தான் இருக்கும்' என்றார்.

# அம்பேத்கரின் வழியிலே பயணித்து, தமிழ்தேசிய இன மக்களின் உரிமைகளை மீட்டெடுப்போம்: சீமான்

சென்னை, டிச.8

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

"ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் நாம் அடிமையாய் வாழ்வதைவிட சுதந்திரமாய் ஓர் நொடி வாழ்ந்து சாவது மேலானது!" என்று கற்பித்த புரட்சியாளர்!

"அறிவைத் தேடி ஓடுங்கள்! நாளைய வரலாறு உங்களைத் தேடி ஓடிவரும்!" என்ற பேரறிஞர்! இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்த சட்டமேதை! "நான் யாருக்கும் அடிமை இல்லை; எனக்கும் யாரும் அடிமையில்லை!" என்று முழங்கிய சமத்துவ நாயகன்! "சாதியக் கொடுமைகளை எதிர்த்து போராடாமல் இருப்பதைவிட செத்து ஒழிவதே மேலானது!" என்ற புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் இன்றைய காலத்தேவை மட்டுமல்ல; என்றைக்குமான காலத்தேவை!

இன்றளவும் தொடரும் சாதிய ஏற்றத் தாழ்வுகளை நொறுக்குகிற வலிமை மிக்க சம்மட்டியாக அண்ணல் அம்பேத்கர் திகழ்கிறார். பன்னெடுங்காலமாக அடிமைப்பட்டு தாழ்தளத்தில் வீழ்ந்துகிடக்குற தமிழ்தேசிய இனப் பிள்ளைகள் உலகங்கெங்கும் மானுட விடுதலைக்குப் போராடிய புரட்சியாளர்களின் வழியிலே எம்மின விடுதலைக்கான அரசியல் புரட்சியை முன்னெடுக்கிறோம்.

சாதிமதப்பிளவுகள்தான் சமநிலைச் சமூகம் அமையவிடாது ஒவ்வொரு தேசிய இனத்திற்குள்ளும் தன்னினப்பகையை மூட்டி அந்த தேசிய இனங்களைப் பிரித்தாண்டு வீழ்த்திக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்த தமிழ்த்தேசிய இனப் பிள்ளைகள் அண்ணல் அம்பேத்கரின் வழியிலே பயணித்து, தமிழ்தேசிய இன மக்களின் உரிமைகளை மீட்டெடுப்போம் என அவரது நினைவுநாளில் உறுதியேற்போம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சுருக்கத் திருத்தத்தின் போது பெறப்பட்ட படிவங்கள் மீது தலத்தணிக்கை

ஈரோடு, டிச.8

ஈரோடு மாவட்டம், ஈரோடு கிழக்கு மற்றும் ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் வாக்காளர் பட்டியல் பார்வையாளராக தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மகேஸ்வரன், சிறப்பு சுருக்கத் திருத்தத்தின் போது பெறப்பட்ட படிவங்கள் மீது தலத்தணிக்கை மேற்கொண்டார்.

இந்திய தேர்தல் ஆணைய அறிவுறுத்தலின்படி, சிறப்பு சுருக்கத்திருத்தம் 2025 ன் ஒரு பகுதியாக ஈரோடு மாவட்டத்தில் 29.10.2024 அன்று வரைவு



வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு, திருத்தப்பணிகள் மேற்கொண்டு 06.01.2025 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படவுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, ஈரோடு மாவட்டத்தில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தப் பணிகளை மேற்பார்வையிடுவதற்கு வாக்காளர் பட்டியல் பார்வையாளராக தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மகேஸ்வரன், ஈரோடு மாவட்டத்திற்கு இரண்டாம் முறையாக வருகை தந்து 98.ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காளைமாடு சிலை, மாணிக்கம்பாளையம், பி.பெ.அக்ரஹாரம் மற்றும் ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வக்கீல் தோட்டம் இபிபி நகர் ஆகிய பகுதிகளில் சிறப்பு சுருக்கத் திருத்தத்தின் போது பெறப்பட்ட வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் முகவரி மாற்றம் கோரி வழங்கப்பட்ட படிவங்களின் மீது தலத்தணிக்கை மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின் போது, ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் மனீஷ் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் ரவி, ஈரோடு வருவாய் வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# உசிலம்பட்டி யூனியன் அலுவலகத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பரிசோதனை பயிற்சி

உசிலம்பட்டி ,டிச.8

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பேரையூர் ரோட்டில் உள்ள யூனியன் அலுவலகத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பரிசோதனை பயிற்சி வழங்கப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாக பொறியாளர் செந்தில் குமரன் தலைமையில் உதவி நிர்வாக பொறியாளர் ரத்தினம், ஸ்ரீதர் ஆகியோர்கள் முன்னிலையில் உசிலம்பட்டி ஊராட்சியில் 18 பஞ்சாயத்தில் உள்ள ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி செயலாளர்கள் மற்றும் மகளிர்சுயஉதவி குழு பெண்களுக்கு இந்த பயிற்சி வழங்கப்பட்டது. இதில் கிராமத்தில் வரும் குடிநீரில் கிரிமி நாசினிகள், தரமான முறையில் குடிநீர் வருவது, குடிநீர் சோதனை பெறுவது, குடிநீரில் குளோரின் அளவு உள்ளிட்டவைகள் கண்டறிவது குறித்து பயிற்சி வழங்கப்பட்டது.



இதில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முத்துபாண்டி, பெரியகருப்பன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# 'இந்தி மீது பூசிய கருப்பு மை... என் முகத்தில் பூசியது போல் கருதுகிறேன்' வெங்கையா நாயுடு



சென்னை,டிச,8

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமியின் 20வது ஆண்டு தொடக்கவிழா நடைபெற்றது. இதில் முன்னாள் ஜனாதிபதி வெங்கையா நாயுடு, முன்னாள் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி சதாசிவம், முன்னாள் கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய வெங்கையா நாயுடு, இந்தியாவில் 2 சதவீதமக்களேஆங்கிலத்தை புரிந்து கொள்வதாகவும், அனைவரும் இந்தி உள்பட மற்ற மொழிகளை படிக்க வேண்டும் என்றும் கூறினார்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் தானும் கலந்து கொண்டதாக குறிப்பிட்ட அவர், இந்தி எழுத்தின் மீது கருப்பு மை பூசி அழித்ததை, தன்னுடைய முகத்திலேயே பூசியது போல் கருதுவதாக தெரிவித்தார்.

மேலும் சூரிய உதயத்தின்போதே எழுந்திருக்க வேண்டும் என்று பேசிய வெங்கையா நாயுடு, தான் குறிப்பிட்டது வானத்தில் உதிக்கும் சூரியன்(Sun) என்றும், இங்குள்ள உள்ளூர் கட்சி தலைவரின் மகன்(Son) அல்ல என்றும் மறைமுகமாக அரசியல் நகைச்சுவை கலந்து பேசினார்.

# இடையகோட்டையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் புரட்சியாளர் அம்பேத்கரின் 68வது நினைவஞ்சலி

ஒட்டன்சத்திரன், டிச.8

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள இடையகோட்டையில் மறைந்த சட்ட மேதை டாக்டர் அம்பேத்கரின் நினைவு நாளை முன்னிட்டு விடுதலை சிறுத்தைகள் கட்சி ஒட்டன்சத்திரம் ஒன்றிய பொருளாளர் சு.வடிவேல் தலைமையில் சட்ட மாமேதை புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கரின் உருவபடத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி



மரியாதை செலுத்தப்பட்டது. இதனையடுத்து ஏழை எளிய மக்களுக்கு அன்னதானமாக பிரியாணி பொட்டலங்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் வீரவளவன், முகாம் செயலாளர்கள் இடையகோட்டை அஜய், வலையபட்டி சக்திவேல், துணை செயலாளர்கள் சுரேஷ், வீரமணி, நிர்வாகிகள் அழகர், முத்துராமன் உள்ளிட்டட ஏராளமான நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# உதகை ஊராட்சி ஒன்றியம், எப்பநாடு ஊராட்சியில் நடைபெற்று வரும் மற்றும் நடைபெற்று முடிந்த வளர்ச்சித்திட்டப்பணிகள்

ஊட்டி, டிச.8

நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், எப்பநாடு ஊராட்சியில் ரூ.12.62 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மற்றும் நடைபெற்று முடிந்த வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

முதலாவதாக, மாவட்ட கலெக்டர், வாழைத்தோட்டம் சோதனைச்சாவடி முதல் சிறியூர் வரை பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனா திட்டத்தின்கீழ் ரூ.12.58 கோடி மதிப்பீட்டில் சுமார் 14 கி.மீ தூரம் பலப்படுத்தப்பட்டு வரும் சாலைப்பணியினை நேரில் பார்வையிட்டு, சாலைப்பணியின்



தரம், அகலம், உயரம் உள்ளிட்டவைகளை குறித்து கேட்டறிந்தார். மேலும், மாவட்ட கலெக்டர், ஆனைக்கட்டி சமுதாயக்கூட முன்புறம் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.4.5 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட மேற்கூரை பணியினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், மாவட்ட கலெக்டர் ஆனைக்கட்டி அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட ஆரம்பப் பள்ளியினை நேரில் பார்வையிட்டு, அங்கு பயிலும் மாணவ, மாணவியர்களின் கற்றல் திறனை கேட்டறிந்து, அவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தினையும், உணவுப் பொருட்களின் இருப்புகளையும், மாணவ, மாணவியர்களின் அடிப்படை வசதிகளான கழிப்பறை, குடிநீர் உள்ளிட்டவைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, ஆனைக்கட்டி கிராமம் கன்னியாகுமரி பகுதியில் வசிக்கும் பழங்குடியின மக்களை நேரில் சந்தித்து, கோரிக்கைகளை கேட்டறிந்து, அப்பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை பார்வையிட்டார்.

இந்த ஆய்வின் போது, முதுமலை புலிகள் காப்பக துணை இயக்குநர் அருண், உதகை வட்டாட்சியர் சங்கர்கணேஷ், உதகை வட்டார வளர்ச்சி அலுவலர் அண்ணாதுரை உட்பட பலர் உடனிருந்தனர்.

# யூ.புரம் பகுதியில் கர்நாடகா மது பாக்கெட்டுகள் விற்பனை செய்தவர் கைது





கிருஷ்ணகிரி, டிச8

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை காவல்துறை கண்காணிப்பாளர்

ஆனந்தராஜ் அறிவுறுத்தையின்படி, ராயக்கோட்டை காவல் ஆய்வாளர் பெரியதம்பி ஆலோசனைப்படி கெலமங்கலம் காவல் உதவி ஆய்வாளர் சிற்றரசு அவர்களுக்கு ரகசிய தகவல் கர்நாடகா மது பாக்கெட்டுகள் விற்பனை செய்கின்றனர் என்று தெரியவந்தது, அப்பொழுது கெலமங்கலம் காவல் உதவி ஆய்வாளர் சிற்றரசு,மற்றும் காவல் உதவி ஆய்வாளர் நேரில் சென்று பார்க்கும் பொழுது சுரேஷ் வயது 38 தந்தையார் பெயர் சாமப்பா, யூ.புரம் நாகமங்கலம் அருகே சுரேஷ் வீட்டின் பின்புறம் கர்நாடகா மது பாக்கெட்டுகள் விற்பனை செய்து கொண்டிருந்த சுரேஷ் இவரை பிடித்து வழக்கு பதிவு செய்து சிறைக்கு அனுப்பி வைத்தனர். பிடிபட்ட கர்நாடகா மது பாக்கெட்டுகள்,55.

# செயின் பறிப்பு திருடனை விரட்டி பிடித்த ஊர்க்காவல் படையினர்

பழனி, டிச.8

பழனி திரு ஆவினாங்குடி கோவிலில் சாமி கும்பிட்டு விட்டு வெளியே வந்த பெண்ணிடம் சுமார் 2 1/2 பவுன் தங்க செயினை பறித்துக் கொண்டு ஓடிய பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மகேஷ் குமார் வயது 39 த. பெ. ஆறுமுகம் செட்டித்தெரங்காடு மூலக்காடு போஸ்ட் பாலக்காடு கேரளா என்பவரை பொதுமக்கள் மற்றும் திருஆவினங்குடி போலீஸ் பூத்தில் பணியில் இருந்த ஊர்க்காவல் படையினர் துரத்தி பிடித்தும் உடனே அடிவாரம் காவல்



நிலையத்திற்கு தகவல் சொல்லி சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து எதிரி மற்றும் எதிரி பறித்து சென்ற செயினை கைப்பற்றியும் எதிரி மீது அடிவாரம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தனர் இந்த செயலால் ஊர்காவல் படையினரை வெகுவாக பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர் ஊர்க்காவல் படையினரை பணியமர்த்திய பழனி உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர் தனஞ்ஜெயன் மற்றும் பழநி நகர காவல் ஆய்வாளர் மணிமாறன் பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர்

# தாராபுரத்தில் அம்பேத்கரின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை

தாராபுரம், டிச.8

சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கரின் பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் உள்ள தமிழ்நாடு மனித வள மேலாண்மை தறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அலுவலகத்தில், அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தலைமையில், டாக்டர் அம்பேத்கரின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இந்த நிகழ்வில் திமுக மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் செல்வராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் கேஎஸ் தனசேகர், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் எஸ்வி செந்தில் குமார், நகரச் செயலாளர் முருகானந்தம், மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் இந்திராணி,



1ஆவது வார்டு கவுன்சிலர் ச.ராசேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டு அம்பேத்கரின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தனர்

# பல்லாவரத்தில் குடிநீர் குழாய்களை தூய்மைப்படுத்தும் பணி தீவிரம்

சென்னை, டிச.8

சென்னை பல்லாவரம் அருகே தாம்பரம் மாநகராட்சியின் 13வது வார்டு பகுதியில் கழிவுநீர் கலந்த நீரை குடித்த பொதுமக்களுக்கு வாந்தி, பேதி பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், 23 பேர் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை பலனின்றி 2 பேர் உயிரிழந்ததாகவும் பொதுமக்கள் முன்வைத்த குற்றச்சாட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக அந்த பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் தா.மோ.அன்பரசன், "குடிநீரால் பாதிப்பு





ஏற்பட்டதாக தெரியவில்லை. உட்கொண்ட உணவில் ஏதேனும் பிரச்சினையா என விசாரணை நடத்தி வருகிறோம். சம்பந்தப்பட்ட இடத்தில் அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்" என்று தெரிவித்தார்.

இந்த நிலையில், பல்லாவரம் அருகே தாம்பரம் மாநகராட்சியின் 13வது வார்டு பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய்களை தூய்மைப்படுத்தும் பணி தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. மேலும் தாம்பரம் மாநகராட்சி கமிஷனர் பாலச்சந்தர் அந்த பகுதியில் உள்ள வீடுகளுக்குசென்றுநேரில் ஆய்வு மேற்கொண்டார். கண்ணபிரான் தெருவில் உள்ள மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி முழுவதுமாக தூய்மைப்படுத்தப்பட்டுள்ளது.

காமராஜ் நகர் பகுதியில் குடிநீர்விநியோகம்மூன்று நாட்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளது. குடிநீர்பகிர்மான குழாய்களில் குளோரின்பவுடர்போடப்பட்டு வருகிறது. வீடு வீடாக சென்று நோய் தடுப்பு மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் காமராஜ் நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்த 2 தனியார் லாரிகள் குறித்து மாநகராட்சி ஊழியர்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கடலூர்: குளத்தில் மூழ்கிய ஐ.டி.ஐ. மாணவர் சடலமாக மீட்பு

கடலூர், டிச.8

கடலூர்மாவட்டம்செம்மண்டலம் பகுதியில் உள்ள அரசு ஐ.டி.ஐ.யில் படிக்கும் மாணவர்கள் நேற்று நத்தப்பட்டில் உள்ள குளத்திற்கு குளிக்க சென்றனர். அவர்களில் கதிர் என்ற மாணவர் எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி மாயமானார். இதையடுத்து இதுகுறித்து தீயணைப்புத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.



சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புத் துறையினர் மற்றும் தேசிய பேரிடர் மீட்பு படையினர் நீரில் மூழ்கிய மாணவரை தேடும் பணியில் ஈடுபட்டனர். நேற்று முழுவதும் தேடுதல் பணிகள் தொடர்ந்தும் மாணவர் கிடைக்கவில்லை. இதையடுத்து மாணவரின் உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில் 2வது நாளாக இன்றும் தேடுதல் பணி தொடர்ந்த நிலையில் ஐ.டி.ஐ. மாணவர் கதிர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

# தமிழ்நாடு வணிக வரித்துறை துணை ஆணையரின் உடல் ஏரியில் இருந்து மீட்பு

சென்னை, டிச.8

தமிழ்நாடு வணிக வரித்துறை துணை ஆணையராக இருந்த செந்தில்வேல் உடல் சென்னை போரூர் ஏரியில் இருந்து மீட்க ப்பட்டுள்ளது.துணைஆணையரின் உடல் சென்னை போரூர் ஏரியில் இருந்து மீட்கப்பட்ட நிலையில், அவர் தற்கொலை செய்து கொண்டாரா? தற்கொலைக்கான காரணம் என்ன? பணிச்சுமையா? கடன் தொல்லையா என்ற கோணத்தில் காவல்துறை



யினர் விசாரணை நடத்தி வருகிறார்கள். போரூரில் வசித்து வந்த செந்தில்வேல் செங்கல்பட்டு வணிக வரித்துறை அலுவலகத்தில் துணை ஆணையராக பணியாற்றி வந்தார். செந்தில்வேலை காணவில்லை என்று அவரது உறவினர்கள் புகார் அளித்திருந்தனர். இந்த நிலையில் தான், அவரது உடல் போரூர் ஏரியில் இருந்து மீட்கப்பட்டு ள்ளது. .தமிழ்நாடு வணிக வரித்துறை துணை ஆணையரின் உடல் போரூர் ஏரியிலிருந்து மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளது. இதன் முடிவுகளு க்கு ப் பிறகே, செந்தில்வேல் மரணத்திற்கான உண்மையான காரணம் என்ன என்பது தெரியவரும் என போலீசார் தெரிவித்தனர்.

# தமிழகத்தில் ஆன்மிகமும், அரசியலும் ஒன்றாக கலந்து விட்டது மதுரை ஆதீனம் பேச்சு



மயிலாடுதுறை, டிச.8

மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூரில் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான அபிராமி அம்மை உடனாகிய அமிர்தகடேஸ்வரர் கோவில் உள்ளது. இந்த கோவிலில் நேற்று வெள்ளி ரத தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. இதில் மதுரை ஆதீனம் ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரியார் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழகத்தில் ஆன்மிகமும், அரசியலும் ஒன்றாக கலந்து விட்டது. ஆதீனங்களில் பொற்கால அருள் ஆட்சி நடத்தும் தருமபுரம் ஆதீனத்திற்குநான்அடிமை. 40 ஆண்டுகளுக்கு பிறகு இந்த கோவிலுக்கு வந்துள்ளேன். அமைச்சர் பெயர் சேகர்பாபு, என்னுடைய பழைய பெயர்பகவதிபாபு. ஆதீனங்களை ஒன்று கூட்டிய பெருமை அமைச்சருக்குத்தான் சேரும். சிறப்பான முறையில் கோவில்களுக்கு அமைச்சர் திருப்பணிகள் செய்து வருகிறார். ஏழையின் சிரிப்பில் இறைவனை காணலாம் என்று அண்ணா சொன்னதை சேகர்பாபு செய்து காட்டியுள்ளார். அவர் நீண்ட காலம் வாழ வேண்டும். இந்த ஆட்சி வளர வேண்டும். மத்தியில் நரேந்திர மோடி ஆட்சி வேண்டும். மாநிலத்தில் தி.மு.க. ஆட்சி வேண்டும்.

தமிழை வளர்த்தது ஆதீனங்கள்தான். சம்பிரதாயங்களை பாதுகாத்தது தருமபுரம் ஆதீனம். தருமபுர ஆதீனம், அமைச்சர் சேகர்பாபு உடன் நெருங்கி பேசியதற்கு என்னை தி.மு.க.காரன் என்று முத்திரை குத்துகின்றனர். எல்லா கட்சிகளுக்கும் பொதுவானவன் நான். நல்ல காரியம் யார் செய்தாலும் பாராட்டுவேன். துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மழை வெள்ளத்தின்போது சிறப்பாக பணியாற்றினார். இவ்வாறு அவர் கூறினார்.

# ராஜபாளையத்தில் தெற்கு நகர அ.தி.மு.க சார்பில் நடைபெற்ற முன்னாள் முதல்வர் ஜெயலலிதா நினைவு தினம் அனுசரிப்பு

ராஜபாளையம்,டிச:8

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் தெற்கு நகர அ.தி.மு.க சார்பில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 8ஆம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

ராஜபாளையம் ஜவகர் மைதானம் அருகே உள்ள அம்மா உணவகம் முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்திற்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளர் என்.எம். கிருஷ்ணராஜ், தெற்கு நகர கழக செயலாளர் பரமசிவம் தலைமையில் அ.தி.மு.கவினர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர். 2026ல் நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க ஆட்சி அமைக்க சபதம் ஏற்போம் என உறுதிமொழி ஏற்கப்பட்டது. நிகழ்ச்சியில் அனைத்துவார்டு உறுப்பினர்கள், கழக அதிமுக கட்சித் தொண்டர்கள், மகளிர் அணியினர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அதனை தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



# சுருளிப்பட்டி அரசு கள்ளர் பள்ளியில் மழைக்கால சித்த மருத்துவ முகாம்

கம்பம், டிச. 8

தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள சுருளிப்பட்டி அரசு கள்ளர் துவக்கப்பள்ளியில் மழைக்கால சித்த மருத்துவ முகாம் மற்றும் பள்ளி குழந்தைகள் நல வாழ்வு முகாம் நடத்தப்பட்டது.

இம்முகாமில் மாணவர்களுக்கு கபசுரக் குடிநீர், நிலவேம்பு கஷாய பாக்கெட்டுகள், கற்றல் குறைபாட்டினை போக்கும் வல்லாரை மாத்திரைகள் வழங்கப்பட்டது. மேலும் தூய்மை காவலர்களுக்கு நிலவேம்பு கஷாயம் பாக்கெட்டுகளாக வழங்கப்பட்டது.

இதில் சித்த மருத்துவ அலுவலர் டாக்டர் சிராஜுதீன், தலைமை ஆசிரியர் மேகலா, பள்ளி நலக்குழு மருத்துவர் ஹரிணிகா, மருந்தாளுநர் பசும்பொன், செவிலியர்கள் காஞ்சனா, ஜமுனா, ஆசிரிய, ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.



# பரமக்குடியில் ராமநாதபுரம் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் அம்பேத்கரின் நினைவு நாள் வீரவணக்க நிகழ்வு

பரமக்குடி, டிச.8

இராமநாதபுரம் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் பரமக்குடியில் மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர் வழக்கறிஞர் வே.சரவணகாந்தி தலைமையில் புரட்சியாளர் சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கரின் நினைவு நாள் வீரவணக்க நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் புரட்சியாளர் அம்பேத்கரின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு மாநிலச் செயலாளர் செந்தாமரைக்கண்ணன், மாவட்ட மகளிர் அணி தலைவி ராமலட்சுமி, மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவர் காஜா நசுமுதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். காங்கிரஸ் நிர்வாகிகள் வட்டாரத் தலைவர் வேலுச்சாமி ரபீக், ஆர்டி ஐ மாநில செயலாளர் மில்கா செந்தில், மனித உரிமைத்துறை மாவட்ட தலைவர் பசும்பொன் சையது அபுதாஹிர், வீரம்பல் ராக்கி, நாகூரான், தண்டபாணி, அருண்பாண்டியன், ராமச்சந்திரன், மேலாய்குடி சண்முகம் அசார், மோகன், மகளிர் அணி மாவட்ட துணைத் தலைவி ஈஸ்வரி, தினகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




# குளிப்பட்டி கிராமத்தில் நூற்றாண்டு பழமை வாய்ந்த உடனுறை ஸ்ரீ வெங்கடாஜலபதி கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்

வத்தலக்குண்டு,டிச.8

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு அருகே உள்ள குளிப்பட்டி கிராமத்தில் நூற்றாண்டு பழமை வாய்ந்த உடனுறை ஸ்ரீ வெங்கடாஜலபதி கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இக்கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு கணபதி ஹோமத்துடன் துவங்கிய கும்பாபிஷேக விழாவில் காசி, இராமேஸ்வரம், காவிரி, கங்கை உள்ளிட்ட பல்வேறு புண்ணிய நதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட புனிநீர், முளைப்பாரி, பால்குடம் ஆகியவை தாரை தப்பட்டை வானவேடிக்கைகள் முழங்க ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது, அதனைத் தொடர்ந்து சிவாச்சாரியர்கள் தலைமையில் வாஸ்து பூஜை, கோபூஜை, சிலை பிரதிஸ்டை, கலச பிரதிஸ்டை பூர்ணாகுதி, யாகவேள்வி உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் அபிஷேக ஆராதணைகள் செய்து வழிபட்டனர்.

இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து இக்கும்பாபிஷேக விழாவில் முக்கிய நிகழ்வாக கடம் புறப்பாடு நிகழ்ச்சியைத் தொடர்ந்து வேத மந்திரங்கள் முழங்க இராஜகோபுர கலசத்திற்கு புனிதநீர் தெளித்து கும்பாபிஷேகம் செய்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து ஸ்ரீ வெங்கடாஜலபதிக்கு பால், தயிர், நெய் உள்ளிட்ட 21வகையான அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஸ்ரீ வெங்கடாஜலபதி சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்தார், இந்நிகழ்ச்சியில் திண்டுக்கல், மதுரை, தேனி, சென்னை, மதுரை, கோவை, நெல்லை உள்ளிட பல்வேறு பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை நட்லவார் பங்காளிகள் செய்திருந்தனர்.



# ஜெயலலிதா 8ம் ஆண்டு நினைவு தினம் தஞ்சையில் அதிமுகவினர் சிலைக்கு மாலை அணிவித்தனர்

தஞ்சாவூர், டிச.8

முன்னாள் முதல் அமைச்சர் ஜெயலலிதா 8ம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு தஞ்சை சாந்தி கமலா தியேட்டரில் இருந்து அ.தி.மு.க.வினர் மத்திய மாவட்ட செயலாளர் மா. சேகர் தலைமையில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் சரவணன் முன்னிலையில் அமைதி ஊர்வலமாக புறப்பட்டு ரெயிலடிக்கு வந்தனர்.

பின்னர் அங்குள்ள ஜெயலலிதா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் மாநில அமைப்பு செயலாளர் காந்தி, கொள்கை பரப்பு துணை செயலாளர் துரை திருஞானம், விவசாய பிரிவு இணை செயலாளர் கு.ராஜமாணிக்கம், துணைச் செயலாளர் சிங்.ஜெகதீசன், ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் அறிவுடைநம்பி, எம்ஜிஆர் மன்ற இணை செயலாளர் துரை. வீரணன், மருத்துவப் பிரிவு இணைச்செயலாளர் துரை.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர் சாவித்திரி கோபால், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜன், மாவட்ட துணை செயலாளர் வெண்ணிலா பாலை ரவி, பகுதி செயலாளர்கள் கரந்தை பஞ்சாபிகேசன், புண்ணியமூர்த்தி, டி.மனோகர், சதீஷ்குமார், பொதுக்குழு மத்திய ஒன்றிய செயலாளர் ஸ்டாலின் செல்வராஜ், முன்னாள் கவுன்சிலர் பூபதி, மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைச் செயலாளர் நடராஜன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் கதிரவன், கவுன்சிலர்கள் கோபால், தெட்சிணாமூர்த்தி, காந்திமதி, நாஞ்சில் கோட்டை கேபிள் செந்தில் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



## நாக சைதன்யாசோபிதா துலிபாலா தம்பதி...ஸ்ரீசைலம் கோவிலில் சாமி தரிசனம்



தெலுங்கு நடிகர் நாகார்ஜுனாவின் மகனும், நடிகருமான நாக சைதன்யா, கடந்த 2017ம் ஆண்டு நடிகை சமந்தாவை திருமணம் செய்து, பின்னர் கடந்த 2021ம் ஆண்டு விவாகரத்து பெற்றார். அதன்பிறகு இரண்டு வருடங்களாக காதலித்து வந்த சோபிதா துலிபாலாவுக்கும், நாக சைதன்யாவுக்கும் கடந்த ஆகஸ்ட் 8ம் தேதி திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது.

இவர்களது திருமணம் கடந்த 4ந் தேதி ஐதராபாத்தில் உள்ள அன்னபூர்ணா ஸ்டுடியோவில் நடைபெற்றது. இந்த திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிரபலங்கள் மணமக்களை வாழ்த்தினர். அதன்பின்னர், நாக சைதன்யா மற்றும் சோபிதா திருமண புகைப்படங்களை நாகார்ஜுனா தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்து இருந்தார். அந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

இந்த நிலையில், நேற்று புதுமண தம்பதிகள் ஆந்திர மாநிலம் கர்னூல் மாவட்டம் ஸ்ரீசைலம் மல்லண்ணா கோயிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்துள்ளனர். புதுமண தம்பதிகளின் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் பரவி வருகின்றன.

## தளபதி 69 படத்தின் டைட்டில் அப்டேட் வெளியானது




வெங்கட் பிரபு இயக்கத்தில் விஜய் நடிப்பில் வெளியான "தி கோட்" திரைப்படம் மாபெரும் வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து நடிகர் விஜய் நடிக்கும் படத்திற்கு தற்காலிகமாக 'தளபதி 69' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தில் பிரகாஷ் ராஜ், பிரியாமணி, கவுதம் வாசுதேவ் மேனன், பூஜா ஹெக்டே, மமிதா பைஜு, நரேன் ஆகியோர் நடிக்க உள்ளனர்.

இந்தப் படம் விஜய் நடிக்கும் கடைசி படம் என கூறி வருகின்றனர். இப்படத்தை எச்.வினோத் இயக்கி வருகிறார். இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படம் அடுத்தாண்டு அக்டோபர் மாதம் வெளியாகவுள்ளது. பிரபல தயாரிப்பு நிறுவனமான கே.வி.என் நிறுவனம் இப்படத்தை தயாரிக்கிறது. 'அனிமல் மற்றும் கங்குவா' படத்தில் வில்லனாக நடித்து அசத்திய பாபி தியோல் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

'தளபதி69'படத்தின்இரண்டாம்கட்டபடப்பிடிப்புசென்னையில்தொடங்கப்பட்டுள்ளதாகததகவல்வெளியாகியுள்ளன. இந்த படமானது அரசியல் தொடர்பான கிரைம் திரில்லர் கதைக்களத்தில் உருவாகி வருவதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையில் தற்போது தளபதி 69 படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் டைட்டில் குறித்த அப்டேட் வெளியாகி உள்ளது. அதன்படி, வருகின்ற டிசம்பர் 31ம் தேதி இரவில் படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் டைட்டில் குறித்த அறிவிப்புகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விரைவில் இப்படம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மெட்ராஸ்காரன் படத்தின் 2வது பாடல் அப்டேட்

கடந்த 2016ம் ஆண்டு வெளியான 'கிஸ்மத்' படம் மூலம் மலையாள சினிமாவில் நாயகனாக அறிமுகமானவர் நடிகர் ஷேன் நிகாம். தொடர்ந்து அவரது நடிப்பில் வெளியான 'இஷ்க்', 'கும்பளங்கி நைட்ஸ்', 'ஆர்டிஎக்ஸ்' உள்ளிட்ட படங்கள் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றன. இந்த நிலையில் ஷேன் நிகாம் தற்போது 'மெட்ராஸ்காரன்' என்ற படத்தின் மூலம் தமிழில் நாயகனாக அறிமுகமாகிறார்.

இயக்குனர் வாலி மோகன்தாஸ் இயக்கியுள்ள இந்த படத்தில் கலையரசன், நிஹாரிகா கொனிடேலா, ஐஸ்வர்யா தத்தா, கருணாஸ், பாண்டியராஜன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். எஸ்.ஆர் புரொடக்சன்ஸ் சார்பில் ஜெகதீஷ் தயாரித்துள்ள இந்த படத்துக்கு சாம் சி.எஸ் இசையமைத்துள்ளார். பிரசன்னா எஸ் குமார் ஒளிப்பதிவு செய்துள்ளார். ஆர் வசந்தகுமார் படத்தொகுப்பு செய்கிறார்.

ஒரு சிறு ஈகோ, ஒருவனின் வாழ்வை எந்த எல்லைக்கு கூட்டிச்செல்லும் என்பதே இப்படத்தின் மையம். சிறு சம்பவம் பெரும்பிரச்சினையாக, மாறி இருவர்வாழ்க்கையை எப்படி புரட்டிப் போடுகிறது என்பதைதிரில்லர்பாணியில்சொல்லும் படமாக இது இருக்கும் என படக்குழு தெரிவித்துள்ளது.

விறுவிறுப்பாக நடைபெற்று வந்த 'மெட்ராஸ்காரன்' படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் நிறைவடைந்தது. கடந்த சில தினங்களுக்கு முன்பாக இப்படத்தின் டீஸர் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

அதைத்தொடர்ந்து இந்த படத்தில் இருந்து 'தை தக்க கல்யாணம்' எனும் பர்ஸ்ட் சிங்கிள் வெளியாகி இணையத்தில் வைரலாகி வருகிறது. இந்த பாடலை கபில் கபிலன் மற்றும் அபர்ணா ஆகிய இருவரும் பாடியிருக்கும் நிலையில் இளன் இந்த பாடல்வரிகளை எழுதி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் படத்தின் அடுத்த பாடலான 'காதல் சடுகுடு' பாடல் நாளை வெளியாகவுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. இப்பாடல் மணி ரத்னம் இயக்கத்தில் மாதவன் மற்றும் ஷாலினி நடித்து வெளியான அலைபாயுதே திரைப்படத்தில் இடம் பெற்ற காதல் சடுகுடு பாடலின் ரீமேக் வெர்ஷனாகும். இதனால் ரசிகர்களிடையே பெறும் எதிர்ப்பார்ப்பு உருவாகியுள்ளது. இப்பாடலின் ஒரு புரோமோ வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

## தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட்; நிசாங்கா அபார ஆட்டம்... 2ம் நாள் முடிவில் இலங்கை 242/3



தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயனம் மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் டெஸ்ட் போட்டியில் தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கெபேஹாவில் நேற்று தொடங்கியது. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற தென் ஆப்பிரிக்கா முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த தென் ஆப்பிரிக்கா நேற்றையமுதல்நாள்ஆட்டநேரமுடிவில்7விக்கெட்டுகளை இழந்து 269 ரன்கள் எடுத்திருந்தது.

தென் ஆப்பிரிக்கா தரப்பில் ரிக்கல்டன் 101 ரன்களில் ஆட்டமிழந்தார். கைல் வெர்ரைன் 48 ரன்களுடன் களத்தில் இருந்தார். இலங்கை தரப்பில் லஹிரு குமாரா 3 விக்கெட்டுகளும், அசிதா பெர்னண்டோ 2 விக்கெட்டுகளும் வீழ்த்தி இருந்தனர். இந்நிலையில், 2வது நாள் ஆட்டம் இன்று நடைபெற்றது. இதில் தொடர்ந்து பேட்டிங் செய்த தென் ஆப்பிரிக்காதனது முதல் இன்னிங்சில் 358 ரன்கள் குவித்து ஆல் அவுட் ஆனது. தென் ஆப்பிரிக்கா தரப்பில் கைல் வெர்ரைன் 105 ரன்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார். இலங்கை தரப்பில் லஹிரு குமாரா 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதையடுத்துஇலங்கைதனதுமுதல்இன்னிங்சைதொடங்கியது.இலங்கையின்தொடக்கஆட்டக்காரர்களாக பதும் நிசாங்கா மற்றும் திமுத் கருணாரத்னே ஆகியோர் களம் இறங்கினர். இதில் கருணாரத்னே 20 ரன்களில் அவுட் ஆனார். தொடர்ந்து களம் இறங்கிய சண்டிமால் 44 ரன்னிலும், நிலைத்து நின்று ஆடிய பதும் நிசாங்கா அரைசதம் அடித்த நிலையில் 89 ரன்களிலும் அவுட் ஆகினர். தொடந்து ஏஞ்சலோ மேத்யூஸ் மற்றும் காமிந்து மெண்டிஸ் ஜோடி சேர்ந்தனர்.

இருவரும் நிதானமாக ஆடி விக்கெட் விழாமல் பார்த்து கொண்டதோடு ரன்கள் சேர்த்தனர். இறுதியில் 2ம் நாள் ஆட்ட நேர முடிவில் இலங்கை தனது முதல் இன்னிங்சில் 3 விக்கெட்டை இழந்து 242 ரன்கள் எடுத்துள்ளது. இலங்கை தரப்பில் மேத்யூஸ் 40 ரன்னுடனும், காமிந்து மெண்டிஸ் 30 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். தென் ஆப்பிரிக்கா தரப்பில் ககிசோ ரபாடா, டேன் பேட்டர்சன், கேசவ் மகராஜ் ஆகியோர் தலா 1 விக்கெட் வீழ்த்தினர். இலங்கை இன்னும் 116 ரன்கள் பின்னிலையில் உள்ளது. நாளை 3ம் நாள் ஆட்டம் நடைபெறுகிறது.

## புரோ கபடி லீக்; குஜராத் ஜெயண்ட்ஸை வீழ்த்தி தமிழ் தலைவாஸ் வெற்றி



11வது புரோ கபடி லீக் தொடர் கடந்த அக்டோபர் 18ம் தேதி ஐதராபாத்தில் தொடங்கியது. இந்த தொடரின் முதற்கட்ட லீக் ஆட்டங்கள் ஐதராபாத்திலும், 2வது கட்ட லீக் ஆட்டங்கள் நொய்டாவிலும் நடைபெற்று முடிந்தன. இந்த தொடரின் 3வது கட்ட லீக் ஆட்டங்கள் தற்போது புனேவில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில்,இந்ததொடரில்இன்று2லீக்ஆட்டங்கள் நடைபெறுகிறது. அதில் இரவு 8 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் தமிழ் தலைவாஸ் குஜராத் ஜெயண்ட்ஸ் அணிகள் ஆடின. இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய தமிழ் தலைவாஸ் புள்ளிகளை குவித்தது.

இறுதியில் ஆட்ட நேர முடிவில் 4027 என்ற புள்ளிக்கணக்கில் குஜராத் ஜெயண்ட்ஸை வீழ்த்தி தமிழ்தலைவாஸ்அபாரவெற்றிபெற்றது. தொடர்ந்து இன்று நடைபெற்று வரும் மற்றொரு ஆட்டத்தில் அரியானா ஸ்டீலர்ஸ் பாட்னா பைரேட்ஸ் அணிகள் ஆடி வருகின்றன.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.